**ஒதுக்கீட்டுத் தலைப்பு- 265**

---

**மாவட்ட செயலகம், மன்னார்.**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2012**

---

**1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்**

(i) பின்வரும் சேவைகளை வழங்குவதன் மூலம் பிரதேச மற்றும் மாவட்ட நிர்வாகத்தை கீழ் மட்டத்திற்கு கொண்டுவருதல்

(அ) தேசிய அடையாள அட்டை சம்பந்தமான சேவைகள்
(ஆ) நன்னடத்தைச் சான்றிதழ்களையும் திருமணமாகாத சான்றிதழ்களையும் விநியோகித்தல்.
(இ) வேலைத் திட்டம் தொடர்பான நடவடிக்கைகள்
(ஈ) சமய அலுவலல்கள் உள மேம்பாட்டு அமைச்சின் ஆதரவுடன் சமய தலங்களை புனரமைப்பதற்கு வசதியளித்தல்

(ii) கணக்கீடு, அறிக்கையிடல் மற்றும் கொத்துக்களின் பாதுகாப்பு என்பவற்றினை உள்ளடக்கிய நிதி நடவடிக்கைகளின் ஆக்கபூர்வமான மற்றும் வினைத்திறனான பயன்பாடு.

(iii) வினைத்திறனான ஓய்வூதியக் கொடுப்பனவுகள்.

(iv) அரசாங்க நிதி மற்றும் வெளிநாட்டு நிதிகளின் கீழ் மன்னார் மாவட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

(v) விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு நெல் முற்பணம் வழங்கல்.

(vi) இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள்.

(vii) பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ்களை வழங்கல் மற்றும் காணிப்பதிவு நடவடிக்கைகள்.

**1.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

(அ) மன்னார்
(ஆ) நானாட்டான்

(இ) முசலி

(ஈ) மாந்தை மேற்கு

(உ) மடு

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

மன்னார் மாவட்ட செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப்பதிவேடுகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய வருமானக் கணக்குகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள், இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்ப்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

மன்னார் மாவட்ட செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மன்னார் மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இந்த அறிக்கையின் (அ) இலிருந்து (ஈ)

வரையான பொது அவதானிப்புக்களையும் 1.6 இலிருந்து 1.13 வரையான பந்திகளில் காணப்படுகின்ற ஏனைய பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களையும் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்படுகின்றது.

**(அ) கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகளைப் பேணாமை**

(i) மாவட்ட செயலகம் பின்வரும் ஏடுகளைப் பேணியிருக்காத அதேநேரம் குறித்த சில ஏனைய பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு தெரிவுச் செவ்வையின்போது அவதானிக்கப்பட்டது.

| **பதிவேட்டின் வகை** | **உரிய பிரமாணம்** |
|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் மீதான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 இன் ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 (1) |

(ii) சிட்டைகள், வேலை பூரணப்படுத்தல் அறிக்கைகள், கொள்வனவு ஆவனங்கள் போன்றன இன்மை காரணமாக மாவட்டச் செயலகத்தின் ரூபா 511,244 மொத்தமான பதினொரு கொடுக்கல்வாங்கல்களை கண்காய்வில் திருத்திகரமாக சான்றுறுதி செய்யமுடியவில்லை.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(i) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழ் செயற்படுகின்ற ஐந்து பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த நிதி ஏற்பாடு ரூபா 152,303,686 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 146,849,558 பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆதலால் மாவட்ட செயலகத்தின் தேறிய சேமிப்பு ரூபா 5,454,128 அல்லது 3.58 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | (%) |
| மீண்டுவரும் | 113,700,000 | 129,453,686 | 127,661,615 | 1,792,071 | 1.38 |
| மூலதனம் | 22,850,000 | 22,850,000 | 19,187,943 | 3,662,057 | 16.0 |
| **மொத்தம்** | **136,550,000** | **152,303,686** | **146,849,558** | **5,454,128** | **3.58** |

**(ii) பாதீட்டு முரண்**

07 செலவின விடயங்களிற்காக ரூபா 2,167,928 தொகையான மிகை ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் அவற்றின் கீழான சேமிப்புக்கள் 27 சதவீதத்திற்கும் 88 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரங்கள் வருமாறு

| செலவின விடயம் | தேறிய ஏற்பாடு | தேறிய செலவினம் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| 265-1-1-1203 | 100,000 | 60,855 | 39,145 | 39 |
| 265-1-1-1401 | 10,000 | 4,800 | 5,200 | 52 |
| 265-1-1-1404 | 50,000 | 5,712 | 44,288 | 88 |
| 265-1-1-1405 | 530,000 | 345,707 | 184,293 | 35 |
| 265-1-1-2002 | 750,000 | 546,943 | 203,057 | 27 |
| 265-1-1-2003 | 1,500,000 | 448,895 | 1,051,105 | 70 |
| 265-1-1-2103 | 1,000,000 | 359,160 | 640,840 | 64 |
| | 3,940,000 | 1,772,072 | 2,167,928 | |

(iii) மீண்டெழும் செலவினத் தொகையான ரூபா 531,371 தவறாக வகைப்படுத்தப்பட்டு 13 சந்தர்ப்பங்களில் பல்வேறு மூலதனச் செலவின விடயங்களின் கீழ் எடுத்து வரப்பட்டிருந்தன.

**(iv) பொதுச் செலவின முகாமைத்துவம்**

2011 நவம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் வழங்கப்பட்ட மீண்டெழும் செலவினத்திலிருந்து 2 சதவீதமான ஏற்பாடுகள் சேமிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும்,

மாவட்டச் செயலகத்தினால் மீண்டெழும் செலவினத்தில் 1.38 சதவீதம் மாத்திரம் சேமிக்கப்பட்டிருந்தது.

**(v) எரிபொருள் மற்றும் மின்சாரச் செலவின முகாமைத்துவம்**

2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய 156 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட வரையறைக்குள் எரிபொருள் மற்றும் மின்சாரச் செலவினங்களை முகாமை செய்தல் வேண்டியதுடன் திறைசேரியிடமிருந்து மேலதிக நிதிகள் பெற்றுக்கொள்ளக்கூடாது என்பதுடன் திறைசேரியினால் நி.பி. 66 இன் கீழ் நிதி ஏற்பாட்டு மாற்றீடுகள் அங்கீகரிக்கப்படவும் மாட்டாது. இருப்பினும், மீளாய்வாண்டில் எரிபொருளிற்காக ரூபா 2,900,000 மேலதிக ஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

**(vi) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு கருமங்களுக்காக 18 அமைச்சுக்கள் மற்றும் 09 திணைக்களங்களிடமிருந்து முறையே ரூபா 146,000,678 மற்றும் ரூபா 293,994,281 அடங்கலாக ரூபா 439,994,959 கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடு பெறப்பட்டிருந்ததுடன் அதில் முறையே ரூபா 112,513,057 மற்றும் ரூபா 249,603,945 அடங்கலாக ரூபா 362,117,002 பயன்படுத்தப்பட்டது. இதன்படி, ரூபா 77,877,957 நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

26501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பில் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ள படியானது | இழிவு எல்லை | உள்ள படியானது | உச்ச எல்லை | உள்ள படியானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 9,500,000 | 8,382,608 | 6,500,000 | 8,030,902 | 49,000,000 | 36,902,576 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச்சென்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 244,593 மொத்தமான கடன் மீதிகள் நிலுவையாக காணப்பட்ட போதிலும், அந்த மீதிகளின் அறவீட்டுத் தன்மை மீதான தொடர்நடவடிக்கை நலிவான மட்டத்தில் இருந்தது.

(ii) பதவி நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து நிலுவையாகவுள்ள ரூபா 31,305 தொகையான கடன் மீதி 2012 திசெம்பர் 31 இலும் அறவிடப்படாது காணப்பட்டது.

(iii) பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவுள்ள ரூபா 80,459 தொகையான கடன் மீதி இந்த அறிக்கைத் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. இக்கடன் மீதி தவறுதலாக திணைக்களத்தில் சேவையாற்றும் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதியாக அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

(iv) மாவட்டச் செயலகத்தின் கடன் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 5,062,239 ஆக காணப்பட்ட போதிலும் தனிப்பட்டோர் மீதிகள் பதிவேட்டின் மொத்தம் ரூபா 4,982,783 ஆக காணப்பட்டதுடன் ரூபா 79,456 வேறுபாடு கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**(உ) பொதுவைப்பு கணக்கு**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் பொதுவைப்பு கணக்கு மீதி ரூபா 62,026,091 ஆனதுடன் அவற்றின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்கு இலக்கம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| 6003/0/0/41 | 62,026,091 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 835,479 தொகையான யூஎன்டீபீ செயற்திட்ட நிதி மீதிகள் தொடர்புடைய நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படாது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(ii) இலங்கை காணி மீட்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட ரூபா 2,158,000 தொகையான நிதிகள் 2009 ஆம் ஆண்டிலிருந்து உரிய நோக்கங்களிற்குப் பயன்படுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

## 1.6 கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 1.6.1 கூட்டிணைந்த திட்டம்

அனைத்து அமைச்சு செயலாளர்கள், மாகாணசபை பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள், உள்ளூராட்சி நிறுவன தலைவர்கள் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து அடுத்து வரும் காலத்திற்கு ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் மாவட்டச் செயலகத்தினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்படவேண்டிய போதிலும் மேற்குறிப்பிட்ட திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மேற்படி 1.6.1 இல் குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கமைய மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுப் பாதீடு 2012 திசெம்பர் வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபைகளை செயற்படுத்தல்

2009 யூன் 12 ஆந் திகதிய ஐஏஜ/2000/1 ஆம் இலக்க திறைசேரிச் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபைகளை காலாண்டிற்கு ஒரு முறையேனும் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் அவ்வாறான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது மற்றும் குறைவாகப் பயன்படுத்தியிருந்த சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன.

| சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்திய காலப்பகுதி |
|---|---|---|
| (i) சிற்றுண்டிச்சாலைக் கட்டிடம் | 01 | இரண்டு ஆண்டுகள் |
| (ii) எப்சன் புரஜெக்ரர் | 01 | ஒரு ஆண்டு |

### (ஆ) வருடாந்த கணப்பீட்டுச் சபையினை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 756 மற்றும் 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் வருடாந்த கணிப்பீட்டுச் சபைகள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டிற்கான மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் பொருட் கணிப்பீட்டுச் சபை அறிக்கை 2013 மார்ச் 31 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மன்னார், மாந்தை மேற்கு மற்றும் முசலி பிரதேச செயலங்களின் 2011 ஆம் ஆண்டு சம்பந்தமான கணப்பீட்டுச் சபை அறிக்கையில் இனங்காணப்பட்ட பயன்படுத்தப்பட முடியாத முறையே 33, 12 மற்றும் 16 களஞ்சிய விடய வகைகள் தொடர்பில் 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகத்தின் ஒரு ஆண்டிற்கும் குறைவான தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 515,804 ஆகும்.

## 1.8 இணக்கமின்மை

**சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வுசெய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (i) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு ஒரு முறையும் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், முசலி பிரதேச செயலகத் தினால் இரண்டு ஆண்டுகளிற்கும் மேலாக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2012 சனவரி 16 ஆந் திகதிய 2012/1 ஆம் இலக்க சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சுச் சுற்றறிக்கையின் 5.6 ஆம் பிரிவு | பசும் பால் நிகழ்ச்சித்திட்டத்தினை கண்காணிப்பதற்காக உதவிப் பிரதேச செயலாளர் / உதவித் திட்டமிடல் பணிப்பாளருக்கு கடமைகள் பிரதேச செயலாளரால் ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் மிருக வைத்தியரினால் தொடர்ச்சியாக பசும் பாலின் தரம் பரிசோதிக்கப்பட வேண்டிய போதிலும், பிரதேச செயலாளர்களால் இத்தேவைப்பாடு பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

## 1.9 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதிலுள்ள பலவீனங்கள்

**செயற்திட்டங்களை செயற்படுத்தல் தாமதங்கள்**

மாவட்டச் செயலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்களை செயற்படுத்துவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவினம் (பதிவேட்டின் படி) | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | |
| மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் பொது மக்கள் கூடமொன்றை நிர்மாணித்தல் | 400,000 | 349,277 | கடும் மழை மற்றும் வெள்ள நிலை |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 மார்ச் 13 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வில் ரூபா 202,618 பெறுமதியான வேலைகள் 2013 மார்ச் 13 ஆந் திகதி வரை பூரணப்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) உடன்படிக்கைத் திகதி, பூரணப்படுத்த வேண்டிய திகதி மற்றும் தாமதக் கட்டணங்கள் என்பன உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 1.10 வங்கிக் கணக்குகளை பேணுவதில் நலிவுகள்

**சீராக்கலிற்கான மீதிகள்**

மாவட்ட செயலகத்தினால் 2012 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்ட சீராக்கல்களின் காலப்பகுப்பாய்வில் வெளிப்பட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **சீராக்கல் விபரம்** | **காலப்பகுப்பாய்வு**<br>**06 மாதங்களிற்கு மேல் 01 ஆண்டிற்கு குறைந்த** | **01 ஆண்டிற்கு மேல் 03 ஆண்டுகளிற்கு குறைவான** | **மொத்தம்** |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வழங்கப்பட்ட ஆனால் கொடுப் பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 43,934 | 13,048 | 56,982 |

## 1.11 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

கொடுப்பனவு ஆவணங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்களின் படி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட ஏற்பாட்டின் கீழ் ரூபா 242,500 பெறுமதியான தற்காலிக நடமாடும் உருக்குக் கொட்டில்கள் நட்டான்கண்டல் கிராமிய அபிவிருத்திச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. இருப்பினும், பௌதீக வெளிக்களப் பரிசோதனையில் 2013 மார்ச் 13 ஆந் திகதி வரை நட்டான்கண்டல் கிராமிய அபிவிருத்திச் சங்கத்திற்கு நடமாடும் கொட்டில்கள் கிடைத்திருக்கவில்லை.

## 1.12 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பல வருடங்களாக தண்ணீர்ச் சிட்டைகளை தீர்ப்பதில் தாமதித்திருந்தமை காரணமாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு ரூபா 25,088 மிகைவிதிப்புச் செலுத்தப்பட்டிருந்தது.

## 1.13 மனித வளங்கள் முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகள் |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 21 | 15 | 06 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 31 | 16 | 15 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 316 | 211 | 105 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 53 | 36 | 17 | - |
| (v) | ஏனையோர் (அமைய) | - | 04 | - | 04 |
| | மொத்தம் | 421 | 282 | 143 | 04 |